இறையரசு மலர

"அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள்"
யோவான்" 2:5

# DIOCESAN NEWS LETTER
## VELLORE
(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 20 August - 2024 No. 08

## St. John Marie Vianney
## The Patron of All Priests



*Wish you all...*

*Happy Feast...*

இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 20 AUGUST - 2024 No. 08

**Dear Fathers, Brothers and Sisters**

The Assumption of Mary that we celebrate on August 15 is one of the four Marian dogmas of the Catholic Church. It was defined by Pope Pius XII on 1 November 1950 in his apostolic constitution ***Munificentissimus Deus*** that follows:

“We pronounce, declare, and define it to be a divinely revealed dogma: that the Immaculate Mother of God, the ever-Virgin Mary, having completed the course of her earthly life, was assumed body and soul into heavenly glory.”

The declaration was built upon the 1854 dogma of the **Immaculate Conception of Mary**, which declared that Mary was conceived free from original sin, and both have their foundation in the concept of **Mary as the Mother of God**. It leaves open the question of whether Mary died or whether she was raised to eternal life without bodily death.

To this we have the answer from the early Church belief that *Teaching of the Assumption of Mary became widespread across the Christian world, having been celebrated as early as the 5th century and having been established in the East by Emperor Maurice around AD 600. John Damascene records the following:*

*St. Juvenal, Bishop of Jerusalem, at the Council of Chalcedon (451), made known to the Emperor Marcian and Pulcheria, who wished to possess the body of the Mother of God, that Mary died in the presence of all the Apostles, but that her tomb, when opened upon the request of St. Thomas, was found empty; wherefrom the Apostles concluded that the body was taken up to heaven.*

The equivalent belief (which is not held as dogma) in the Eastern Orthodox Church is the Dormition of the Mother of God or the "Falling Asleep of the Mother of God".

The word 'assumption' derives from the Latin word *as*sumptio meaning 'taking up'. So it goes without saying that Mary was taken up into heaven by the Father as a reward for her earthly life that was designed by Him.

What we learn the lesson from this feast of Assumption is twofold:

1. It was purely God's work that Mary was taken up into heaven body and soul as a token of His reward for her godly and holy life on earth.

2. As Pope Pius XII expressed in his encyclical *Munificentissimus Deus* our hope that the belief in the bodily assumption of the virgin Mary into heaven "will make our belief in our own resurrection stronger and render it more effective"

It is our diocesan Cathedral feast and we wish the parish priest, Asst. parish priest and the faithful a very **HAPPY FEAST**.

After 4 years of interval since the threat of Pandemic we the Vellore diocese Presbytarium once again gather at Madha Hill, Chetpet on Monday 5 August 2024 in view of the feast of St. John Marie Vianny, Patron of all diocesan priests let us come together as one family play, chat, share, pray and celebrate our priest's unity and make the day more fun and boon.

I, as the diocesan Administrator take this opportunity to wish you all a very **HAPPY FEAST.**

On August 10 we observe **BLACK DAY**, a day that we fight for right of SC/ST status to Dalit Christians that we are fighting for more than 74 years. At this juncture I ask all the parish priests and religious institutions to celebrate the liturgy on this theme and conduct possible public protests, march and rally as sign of our solidarity.

On August 18 the consecration of bishop-elect for the diocese of Tanjore Most Rev. Dr. T. Sagayaraj is going to be held at the Cathedral campus of Tanjore. Let us keep the new bishop of Tanjore in our prayers. We wish him all God's choicest blessings and hearty **CONGRATULATIONS**

On August 25 kindly read in your respective parishes and religious institutions the **PASTORAL PLAN** that was prepared and sent by CCBI.

I take this opportunity to wish all those who celebrate their birthday, feast day and ordination day this month all God's abundant blessings and the intercession of our blessed Mother.

God bless,



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை மேய்ப்புப்பணிதிட்டம் : ஞாயிறு சுற்றறிக்கை

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையில் உள்ள இலத்தீன் ரீதியைச் சார்ந்த அனைத்து பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக்கும், திருத்தொண்டர்களுக்கும், துறவிகளுக்கும், வேதியர்களுக்கும் மற்றும் பொதுநிலையினர் நம்பிக்கையாளர்களுக்கும் இயேசு கிறிஸ்துவில் அன்பு நிறை சகோதரர்களே, சகோதரிகளே

1. கடவுளின் மக்கள் இணைந்து பயணிப்பதே திரு அவை ஆகும். அதன் உறுப்பினர்கள் உயிர்த்த ஆண்டவர் ஒப்படைத்த மறைத்தூதுப் பணியை இவ்வுலகில் தொடர்ந்து ஆற்றுகின்றனர். வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து வெளிவந்த ஆவணங்கள் அடிக்கடி சிறப்பித்து சுட்டிக்காட்டிய வத்திக்கான் சங்கத்திரு அவையின் பார்வையைவலியுறுத்துகிற வகையில், நமது பாசத்திற்குரிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒட்டுமொத்த திரு அவைக்கும் 2021ம் ஆண்டு அக்டோபர் மாதம் அழைப்புவிடுத்தார். அவ்வழைப்பில் கூட்டொருங்கியக்க செயல்முறைக்காக விரிவான கலந்தாய்வு, தீவிரமான கருத்துக்கோரல், இறைவேண்டலின் அடிப்படையில் உய்த்துணர்தலும் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இச்செயல்முறை 2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நிறைவடையும் என்றார். இந்த தொடர் கூட்டொருங்கியக்கப் பயணத்தின் வழியாக நாம் இணைந்து பயணிக்கவும், தூய ஆவியாரின் வழிகாட்டலை கேட்கவும், ஒருவர் மற்றவருக்கு கவனமுடன் செவிசாய்க்கவும், ஒன்றிப்பை பேணவும், பங்களிப்பை ஆற்றவும், மறைத்தூதுப் பணியை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளவும் விளைகின்றோம். மறைமாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற அருள் சூழ்ந்த அவ்வமர்வுகளில் பங்கெடுத்து, அதன்படி திரு அவை என்பது ஒன்றாக பயணிக்கும், கவனமுடன் கடவுளுக்கு செவிகொடுக்கும் மற்றும் ஒருவர் மற்றவருக்கும், படைப்புக்கும் செவிகொடுக்கும் கடவுளின் பிள்ளைகள் என்பதைச் செயல்படுத்த விழைகிறோம்.

2. இருப்பினும் கூட்டொருங்கியக்கச் செயல்முறைகளின் விளைவுகளை எவ்வாறு திட்டவட்டமாக நடைமுறைக்கு கொண்டு வருவது என்று நமக்கு நாம் கேட்டுக் கொள்வதை உணர்கிறோம். இத்திட்டத்தை உணர்ந்துகொள்ள இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை 2033-ல் கடவுள் திரு அவையை எப்படிப்பட்டதாக இருக்க அழைக்கிறார் என்ற வினாவிற்கு விடையளிக்கும் விதமாக ஒரு மேய்ப்புப் பணித்திட்டச் செயல்முறையில் தீவிரமாக களமிறங்கத் தீர்மானித்தது. இந்திய இலத்தின் ரீதி கத்தோலிக்கத் திரு அவையின் ஆயர்கள், அருள் பணியாளர்கள், துறவறத்தார், பெண்கள், ஆண்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய 5000 உறுப்பினர்களை உள்ளடக்கிய இது, ஓர் ஆண்டு முழுவதற்குமான செயல்முறையாக அமைந்திருந்தது. பங்கேற்பாளர் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் மனதார ஏற்றுக் கொள்கிறோம்.

3. மாமன்ற திரு அவையை நோக்கி மறைத்தூதுப் பணி 2033 என்ற தலைப்பிட்ட இறுதி வடிவ மேய்ப்புப் பணித்திட்டத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறோம். இது ஆவியானவரில் மனம் திறந்த உரையாடல்களின் பலன் ஆகும். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமாறு மனதார வேண்டுகிறோம்.

இந்த மேய்ப்புப் பணிச் செயல்திட்டம் நமக்கு நாமே கொடுத்துக் கொள்கிற கட்டளையுமாகும். நம் அனைவருடைய திட்டமும் ஆகும். எனவே ஒவ்வொரு தனிநபரும் இத்திட்டத்தை மறைமாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் செயல்படுத்த அவர்களால் இயன்ற பங்களிப்பை உய்த்துணர வேண்டும். இத்திட்டத்தின் மையம் தேசிய பணிக்குழுக்களின் மீது நிலை பெற்றிருப்பினும், இத்திட்டத்தின் பலன்கள் நமது மாநில மற்றும் மறைமாவட்ட திரு அவைகளைத் தொடர்ந்து அனைத்து பங்குகளையும் சென்றடைந்து நன்மை பயக்கும் என்பதை நாங்கள் ஆழமாக அறிந்திருக்கிறோம்.

4. எல்லா நிலைகளிலும் நமது நம்பிக்கை, வாழ்க்கை மற்றும் மறைத்தூதுப் பணியின் தரத்தை ஆழப்படுத்த கடவுள் நம்மை அழைக்கிறார். இம் மேய்ப்புப் பணித் திட்டம் பொதுநிலையினரின் இந்தக் கனவை நிறைவேற்றும் என்று உறுதியாக நம்புகிறோம். ஒரு சில மறைமாவட்டங்களும், மாநிலங்களும் தங்களின் மேற்ப்புப் பணித் திட்டத்தை தேசிய மேய்ப்புப் பணித் திட்டத்தோடு இணைந்திருக்குமாறு செய்துள்ளார்கள் என்பதை அறிந்து குறிப்பாக மகிழ்ச்சி கொள்கிறோம். அதற்காக நன்றி கூறுகின்றோம்.

5. நம்பிக்கையின் ஆண்டு எனும் 2025-ன் புனித ஆண்டுக்காக நம்மை நாமே தயாரித்து வருகிறோம். யூபிலி ஆண்டின் போதே அகில இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் தேசிய மேய்ப்புப் பணித் திட்டத்தை, தேசிய, மாநில, மறைமாவட்ட மற்றும் பங்கு அளவில் செயல்படுத்த வேண்டும் என்பது எங்களது தீவிர ஆசையாக உள்ளது. அதன்படி 2033-ம் ஆண்டு நம்முடைய மீட்பின் மாபெரும் யூபிலியைகொண்டாடும்போது, இந்த மேய்ப்புப் பணித்திட்டத்தின் பலன்களைக் கண்டு சான்று பகர்வோம். வரும் ஆண்டுகளில் இந்த மேய்ப்புப் பணித் திட்டத்தைச் சரியான விதத்தில் செயல்படுத்த உங்களின் பங்கேற்பும் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாததாகும். இச்செயல்முறைகளை நடைமுறைப்படுத்த பொதுநிலையினரும், பெண்களும், இளையோரும் அதிக பங்களிப்பு தர இயலும் என்று உறுதியாக நம்புகிறோம்.

6. இந்த மேய்ப்புப் பணித் திட்டமானது 2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. நன்றி திருப்பலி ஒப்புக்கொடுத்து, இத்திட்டத்தை தேசிய, மாநில, மறைமாவட்ட மற்றும் பங்கு அளவில் அதிகாரப்பூர்வமாக 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் நாள் தொடங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

7. இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஒரு குழு, அத்திருப்பலிக்கான கருவித் தொகுப்பையும், இத்திட்டத்ததைக் குறித்த தேவையான தகவல்களை மற்றும் முக்கிய விபரங்களைக் குறித்து தெரிவிக்க, இறை மக்களுக்கு தேவையான காணொளிக் காட்சிகள், சுருள் படங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றைத் தயாரித்து வழங்கும். இச்செயல் முறைகளை நடைமுறைப்படுத்தும் போது, நம்மை மேலும் ஊக்குவிக்கும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்தும் மக்களின், சமூகங்களின் பதிவுகள் விதைக்கப்படும். வழிகாட்டும் குழு ஒன்று பணிக்குழுக்களையும் அதன் செயல்முறையையும் தொடர்ந்து வழி நடத்தும்.

8. இந்த கூட்டொருங்கியக்கப் பயணத்தில் பங்கேற்குமாறு உங்களை அழைக்கின்றோம். ஒன்றாக இணைந்து பயணிக்கையில் கடவுள் நமக்கு விடுக்கின்ற அழைப்பை உணர்ந்து புதிய வழித்தடத்தில் நடைபோடுவோம். நமது சுகமான வட்டங்களை உடைத்தெறிந்து வெளியே வருவோம். புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்வோம். ஆவியானவரின் தூண்டுதலில் கிறிஸ்தவர்கள் என்ற நமது அழைப்பை ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்ந்து காட்டி, திரு அவையில் உத்வேகத்துடன் பங்கெடுக்கும் அர்ப்பணம் உள்ள சீடர்களாகப் பங்கெடுப்போம், மறைத்தூதுப் பணி நோக்கிய கூட்டொருங்கியக்கப் பெருவழியை உய்த்தறிந்து தொடர்ந்து முன்னேறுவோம்.

9. அனைத்து பேராயர்களும், ஆயர்களும், அருள்பணியாளர்களும், துறவறத்தாரும், பொதுநிலையினரும், இளையோரும் எல்லோருக்கம்

மிக அதிகமான கனிகளைக் கொடுக்கும் கூட்டொருங்கியக்கத் திரு அவை நோக்கிய இப்பயணத்தில் இணைந்துகொள்ள வலியுறுத்துகிறோம். அனைவரும் ஒன்றிணைந்து அனைவரையும் உள்ளடக்கிய, கூட்டொருங்கியக்க, வரவேற்கும் மற்றும் கிறிஸ்துவின் கனிவான அன்பைக் கொண்டு ஊடுருவும் ஒரு திரு அவையைக் கட்டி எழுப்ப முழு முயற்சியுடன் ஈடுபடுவோம்.

நாம் அனைவரும் இணைந்து இப்பயணத்தை தொடங்குகையில் கடவுள் உங்களை நிறைவாய் ஆசிர்வதிப்பாராக.

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை, தலைமைச் செயலகம், பெங்களூரு, 9 ஜூலை 2024 கர்தினால் பிலிப்நேரி,தலைவர், கோவா தாமான், பேராயர். பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, துணைத்தலைவர், சென்னை மயிலை பேராயர், பேராயர் அனில் கூட்டோ, பொது செயலர், டெல்லி பேராயர் (இந்த சுற்றறிக்கையை மற்றும் இதில் அடங்கியவைகளைத் தெளிவுபடுத்தி இந்திய கத்தோலிக்க திரு அவையின் இலத்தீன் ரீதியல் உள்ள 132 மறைமாவட்டங்களின் எல்லா பங்குகளிலும், துறவற இல்லங்களிலும், நிறுவனங்களிலும் வருகின்ற ஆகஸ்ட் மாதம் 25-ம் நாள் வாசிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்).

## ADMINISTRATOR'S PROGRAM

| | | |
|---|---|---|
| 01 | | Golden Jubilee Celebration of Bishop. Antony Samy, Bishop of Kumbakonam |
| 05 | M | Priests day Celebration, Chetpet |
| | E | Flag Hoisting, Assumption Cathedral, Vellore |
| 06 | | Blessing of the Grotto, Tirupattur |
| 10 | | Black Day, Chetpet |
| 11 | | St. Clare Feast, Adoration Monastery, Rangapuram |

14 Eucharistic Day, Assumption Cathedral, Vellore

15 Feast Mass – Our Lady of Assumption, Cathedral Vellore

16 Flag Hoisting, Ulaga Madha Church, T.V. Malai

17 Inauguration of Golden Jubilee of Diocesan Youth Commission, Chetpet

18 M Feast Mass, Christianpet – Vellore

E Consecration of Bishop Elect. Most. Rev. Dr. Sagayaraj, Thanjavur

**Very Rev. Msgr. I. John Robert,**

Diocesan Administrator

## PROCURATOR'S OFFICE

### GOOD FRIDAY COLLECTION - 2024

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Kilnathur | 5000 |
| 2 | Avoor | 5320 |
| 3 | Santhavasal | 10420 |
| 4 | Japthikarani | 4000 |
| | **Total** | **24740** |

Thanks for all those who have alredy remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

**Mr. S.Justin**
Staff Accountant

## கத்தோலிக்க மேய்ப்புப்பணி நிலையம்

பள்ளி மறைக்கல்வி / நன்னெறி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மறைவட்டத்தில் பாசமிகு பள்ளி தாளாளர் மற்றும் தலைமையாசிரியர் அவர்களுக்குமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துக்கள்

நமது பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறிபாடத்திற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கபட வேண்டும். பிள்ளைகளை நல்லொழுக்கத்திலும், ஆன்மீகத்திலும் உருவாக்க வேண்டியது ஆசிரியர்களாகிய நமது பொறுப்பும், கடமையும் ஆகும். எனவே மறைப்பணி மைய இயக்குனர் அருள்பணி. N.T.இருதயராஜ் அவர்கள் மறைக்கல்வி / நன்னெறி ஆசிரிய பெருமக்களுக்கு ஒரு நாள் கருத்தரங்கு ஏற்பாடு செய்துள்ளார். பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடங்களை எப்படி கற்று கொடுப்பது, பாட உபகரணங்கள் எவ்வாறு பயன்படுத்துவது போன்றவற்றை தெரிந்துக்கொள்ள இக்கருத்தரங்கு மிகவும் அவசியமானது. மறைக்கல்வி / நன்னெறி கருத்தரங்கு வேலூர் மற்றும் திருவண்ணாமலை மறைவட்டத்தில் நடைபெற உள்ளது. நமது கிறிஸ்துவ பள்ளிகளில் இருக்கின்ற மறைக்கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியர் மற்றும் நன்னெறி பாடம் கற்பிக்கின்ற ஒரு ஆசிரியர் ஆக இரு ஆசிரியர்கள் ஒவ்வொரு பள்ளியிலிருந்து தவறாமல் கலந்துகொள்ள அனுப்பி வைக்குமாறு பள்ளி தாளாளர் மற்றும் தலைமை ஆசிரியர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை : பேரருட்திரு. ஜான் ராபர்ட்,
வேலூர் மறைமாவட்ட பரிபாலகர்

கருத்தாளர் : அருள்பணி. பெனடிக்ட் ஆனலின் செயலர், தமிழக மறைக்கல்விப் பணிக்குழு முப்பணி மையம்,
திண்டிவனம்

| | |
|---|---|
| நாள் | : 10.08.202, சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4.30 வரை |
| இடம் | : திருவண்ணாமலை உலக மாதா ஆலயம் |
| மறைவட்டங்கள் | : திருவண்ணாமலை, வேட்டவலம், சேத்பட், போளூர் |
| நாள் | : 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 வரை, மாலை திருப்பலியுடன் முடிவடையும் |
| இடம் | : ஆயர் இல்லம், வேலூர் (ஜூபிலி ஹால்) (வேலூர், வந்தவாசி, திருப்பத்தூர், அரக்கோணம்) |
| பதிவு கட்டணம் | : நபர் ஒருவருக்கு ரூபாய் 100 |

குறிப்பு : ஒவ்வொரு மறைவட்டத்திலும் தவறாமல் பங்கேற்க ஆசிரிய பெருமக்களை அன்போடு கேட்டுகொள்கிறேன்.

தங்களின் மேலான ஒத்துழைப்புக்கு நன்றி.

**ஆகஸ்ட் மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்**

**03.08.2024 மாதத்தின் முதல் சனிக்கிழமை**

இடம் - உலக மாதா ஆலயம், திருவண்ணாமலை
நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

**17.08.2024 மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை**

இடம் - ஆயர் இல்லம், வேலூர்
நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

இறைபணியில் அன்புடன்
அருட்பணி **N.T.இருதயராஜ்**
இயக்குநர், மேய்ப்புப்பணி நிலையம். வேலூர்

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

### HUNGER & DISEASE FUND COLLECTION - 2024

10.07.2024 : சென்னை தேசிய கோல்பிங் அலுவலகத்தில் நடைபெற்ற நடப்பு ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு பற்றிய கூட்டத்தில் வேலூர் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் பேரருட்திரு. ஜேம்ஸ், கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. யேசுகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

16, 17.07.2024 : ஆகிய இரண்டு நாட்கள் சென்னை தேசிய கோல்பிங் அலுவலகத்தில் இயக்குநர் பேரருட்திரு. மரியசூசை அவர்கள் தலைமையில் தமிழக அனைத்து மறைமாவட்ட கோல்பிங் இயக்கங்களின் மதிப்பீட்டுக் கூட்டம் நடைபெற்றது. வேலூர் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் பேரருட்திரு. ஜேம்ஸ் மற்றும் கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்துக்கொண்டு மறைமாவட்ட கோல்பிங் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்கால செயல்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டது.
பயிற்சிகள் :

4.07.2024 சிறுபான்மையினர் நலவாரிய கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுபான்மையின் கிறிஸ்தவ மக்களுக்கான திட்டங்கள், பழுதடைந்த ஆலயம் புதுப்பித்தல், கல்லறைத் தோட்டத்திற்கான செயல்திட்டம் ஆகியவைகள் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் சங்க உறுப்பினர் திரு. பேட்ரிக் அவர்கள் கலந்துக்கொண்டார்கள்.

05, 09, 12, 19, 24, 31.7.2024 ஆகிய நாட்களில் வேலூர் மறைமாவட்டத்தில் செயல்படும் கோல்பிங் இயக்கங்களின் பயிற்சிகள் கெங்கல்பட்டு, கெங்காபுரம், சென்னாத்தூர், பல்லாலகுப்பம், இராணிப்பேட்டை, அல்லிகொண்டாப்பட்டு ஆகிய இடங்களில் தலைமைத்துவ பண்பு, கண்காணிப்பு குழு உருவாக்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வளங்கள் மேம்பாடு, அரசு நலத்திட்டங்கள் ஆகிய தலைப்புகளில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியினை திட்ட ஒருங்கிணைப்பாளர், கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரால் நடத்தப்பட்டது.

## HUNGER & DISEASE FUND COLLECTION - 2024

| S.NO. | PARISHES | AMOUNT [RS.] |
|---|---|---|
| 1 | Kilnathur | 5,000 |
| 2 | Santhavasal | 2,170 |
| 3 | Japthikarani | 5,000 |

குறிப்பு :-

- பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு பங்கு தந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும்.
- பசிப்பிணி நிதி வழங்காத பங்குகள் VSSS அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- வங்கியில் NEFT or RTGS வழியாகவும் செலுத்தலாம்.

Name : Vellore Social Service Society

Bank Name : Bank of Baroda, Officers' Line, Vellore Branch

Account Number : 7502010005952
IFSC Code : BARB0VJVELL

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## கோடெப்

### சேர்க்கை நடைபெறுகிறது
### “உன் கையில் திறமை, இனி இல்லை வறுமை”

சேத்பட் கோடெப் ஐ.டி.ஐ. கல்லூரியின் வணக்கமும் / வாழ்த்தும்.

இந்த நிறுவனம் 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 35 ஆண்டுகளாக 1. மோட்டார் மெக்கானிக் 2. பிட்டர் 3. எலக்ட்ரிசியன் 4. சோலார் டெக்னிசியன் (எலெக்டரிசியன்) 5. வெல்டர் தொழிற் பிரிவுகளை கொண்டு மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்று சிறப்பாக செயல்பட்டு வருகிறது. திறமையான மற்றும் தரமான ஆசிரியர்களை கொண்டு சிறப்பான பயிற்சியும் அளிக்கிறது.

சிறப்பம்சங்கள் :

- தொழிற்பயிற்சி அரசு பணிமனைகளில், லேத் மற்றும் வெல்டிங் பட்டறைகளில் பணிமனைப் பயற்சி.
- வேலை வாய்ப்பு 100% உடனடி வேலை வாய்ப்பு.
- சிறப்பாக கணினி மற்றும் ஆங்கில பயிற்சி.

- +2 முடித்த மாணவ/மாணவிகளுக்கு தமிழ் புதல்வன், புதுமை பெண் திட்டத்தில் மாதம் ரூ. 1000/-
- கருத்தரங்குகள் சமூக நல, மனித நல மற்றும் மன நல கருத்தரங்குகள்.
- கூடுதலாக ஓட்டுநர் பயிற்சி மற்றும் அரசு கல்வி உதவி தொகை.
- விழாக்கள் பட்டமளிப்பு விழா, விளையாட்டு போட்டிகள், முன்னாள் மாணவர் சங்க விழா, ஆண்டு விழா மற்றும் விழிப்புணர்வு பேரணிகள்.
- இலவசம் மதிய உணவு, முட்டை, மாலை சிற்றுண்டி.
- எலக்ட்ரிசியன் மற்றும் சோலார் டெக்னிசியன் (எலக்ட்ரிசியன்) பயிற்சி ஆண் / பெண் (இருபாலருக்கும்).
- இலவசம் சீருடை தங்கும் இடம் / உணவு.

இந்த வாய்ப்பை பயன்படுத்தி கோடெப் ஐ.டி.ஐ. கல்லூரியில் சேர்ந்து படிக்க தங்கள் பணித்தளத்தில் தொழிற்பயிற்சி படிக்க ஆர்வமுள்ள பிள்ளைகளை நம்மறைமாவட்டத்தின் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் படிக்க அனுப்பிவைக்க வேண்டுமாய் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிறைவான பயிற்சி, குறைவான கட்டணம், 100% உடனடி வேலை வாய்ப்பு

அன்புடன்

| | |
|---|---|
| அருட்பணி. ச.ரிச்சர்ட் பெரைரா | திரு. மரிய லூயிஸ் |
| இயக்குநர் 97515 56471 | முதல்வர் 94429 76023 |

## மரியாயின் சேனை

திருப்பத்தூர் கியூரியா ஆச்சேஸ் விழா 16.6.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி திருப்பலியோடு ஆரம்பமானது. இவ்விழா பேரருட்பணி. கிளமண்ட், VF அவர்கள் தலைமையிலும், பக்தசபை இயக்குனர் பேரருட்பணி. ஜெயபிரகாசம் முன்னிலையிலும் கோணம்பேடு பங்கில் அப்பங்குதந்தையின் பொறுப்பில் இவ்விழா ஆரம்பமானது முதலில் வரவேற்பு நடனம், பாடல் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பங்கேற்ற பங்கின் சேனையாளர்கள் சிறப்பாக வெகு ஆடம்பரமாகவும், அன்னையை மகிமைபடுத்தினர். இரு தந்தையர்களும், ஆச்சேஸ் விழாவின் விளக்கங்களும், அது கொண்டாடுவதால் ஏற்படும் பயன்களையும் விளக்கி கூறினர். கொமித்சிய பொறுப்பாளர்கள் வாழ்த்து கூறினர். சகோ. ரத்னா மேரி சேனையின் ஒழுங்கு முறைகள் அதை கடைபிடிக்க வேண்டிய கட்டாயம், ஒவ்வொரு சேனையாக பின்பற்ற கேட்டுக்கொண்டார். இதில் பங்கேற்ற பிரசீடியங்கள்: திருப்பத்தூர் சோலையார்பேட்டை, புதூர், வேப்பம்பட்டு, கோணாம்மேடு, கொடையாஞ்சி, கனமந்தூர் கோவிலூர், உதயேந்திரம் ஆகும். மொத்தம் 65 சேனையார் பங்கேற்று அன்னைக்கு தங்கள் வாக்குறுதிகளை புதுப்பித்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தேனீர், மத்திய உணவு கோணாம்மேடு பங்குத் தந்தையால் வழங்கப்பட்டது.

2. பேராலய கிளைப்பங்கு அரியூர் பிரசீடியம் கொமித்சிய செயலர், துணைத்தலைவரால் பார்வையிடப்பட்டு, சேனைக்கூட்டம் நடத்தும் முறைகள், ஒழுங்கு அமைப்புமுறை தெளிவாக விவரிக்கப்பட்டது. கூட்டம் தவறாமல் நடத்தி சேவை அறிக்கையை நிர்வாக சபைக்கு அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. 30.6.2024 காலை 8.30 மணிக்கு திருப்பலி முடிந்தவுடன், மாதிரி கூட்டம் நடத்தி காண்பித்து பொறுப்பாளரின் கடமைகளை மறக்காமல் பின்பற்ற கேட்டுக் கொள்ளப்பட்டது. வருகை தந்த சேனையார் மொத்தம் 9 பேருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

3. இராணிப்பேட்டை கியூரியா 7.7.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திருப்பலி முடிந்தவுடன் பங்குத்தந்தை. லியோ மரிய ஜோசப் தலைமையிலும், பேரருட்தந்தை. ஜெயபிரகாசம் முன்னிலையிலும், கொமித்சிய பொறுப்பாளர்கள் பங்கேற்போடு அவர்கள் தங்கள் ஆச்சேஸ் விழாவை கொண்டாடினர். இதில் கலை நிகழ்ச்சிகள், மறைக்கல்வி சிறுவர்களின் நடனம் ஆகிய சிறப்பான நிகழ்வுகள் மூலம் சேனையாளரை மகிழ்வித்தனர். இரு அருட் தந்தையர்களும் அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி சேனையின் மேன்மை, ஆச்சேஸ் விழா முக்கியத்துவம் பற்றி விளக்கினர். சகோ. ஜெசிந்தா சேனையாளரின் கடமைகளை விளக்கினார். சகோ. ரத்னா மேரி சேனையாளரின் ஒழுங்குமுறைகள், விழா கொண்டாடுவதின் நோக்கம் பற்றி விளக்கினார்கள். மொத்தம் 5 பிரசீடியங்கள் கலந்துக் கொண்டன. அவை, காரை, ஆற்காடு, ஆலப்பாக்கம், பெல், சிப்காட் மொத்தம் 21 சேனையார் தங்கள் வாக்குறுதிகளைப் புதுப்பித்தனர். வருகைதந்த அனைவருக்கும் தந்தை லியோ அவர்களால் தேனீர், மத்திய உணவு வழங்கப்பட்டது.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகோ. ரத்னாமேரி**
கொமித்சிய தலைவி, வேலூர்

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. C.Antony Chinnappa Xavier | 01-08-1976 |
| 2 | Fr. M.Irudayasamy | 02-08-1971 |
| 3 | Fr. Motchanathan | 05-08-1969 |
| 4 | Fr M.Devanesan | 06-08-1981 |
| 5 | Fr. N. Sagayanathan Kanikairaj | 08-08-1975 |

| | | |
|---|---|---|
| 6 | Fr. M. Gregory | 08-08-1988 |
| 7 | Fr. C. Arun Kumar | 11-08-1985 |
| 8 | Fr. P. Daniel Sharma | 11-08-1987 |
| 9 | Fr. D.Panneerselvam | 12-08-1962 |
| 10 | Fr. S.Antony Rosario | 13-08-1980 |
| 11 | Fr. J.Irudayaraj | 14-08-1963 |
| 12 | Fr. A.Lourdu Xavier | 14-08-1972 |
| 13 | Fr. D.Paul Arockiam | 16-08-1981 |
| 15 | Fr. D.Arul John Bosco | 20-08-1981 |
| 16 | Fr. R.Lawrence | 23-08-1972 |
| 17 | Fr. S.Francis | 24-08-1976 |
| 18 | Fr. A.Anandaraj | 27-08-1983 |
| 19 | Fr.J.Amuthan | 28-08-1991 |
| 20 | Fr. D.Amalraj | 29-08-1950 |

## ORDINATION DAY

| | | |
|---|---|---|
| 1 | Fr.A.Jonas Philomina Doss | 24-08-2005 |
| 2 | Fr.S.C.Jeyakumar | 24-08-2005 |
| 3 | Fr. Y.Anthony Raj | 28-08-1981 |
| 4 | Fr. P.John Bosco | 28-08-1981 |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 1 | Most Rev. Louis Mathias SDB | 03.08.1965 |
| 2 | Rev. Msgr. John Mora SDB | 05.08.1961 |
| 3 | Rev. Fr. A. Fernandez | 05.08.1995 |

| | | |
|---|---|---|
| 4 | Rev. Fr. Paul Bazgier SDB | 07.08.1965 |
| 5 | Rev. Fr. A. Philominraj | 08.08.2019 |
| 6 | Rev. Fr. L. M. Arul | 17.08.1974 |
| 7 | Rev. Fr. Amaladoss Anthonysamy SDB | 20.08.1983 |
| 8 | Rev. Fr. G. J. Lawson | 22.08.1987 |
| 9 | Rev. Fr. N.A. John Peter | 26.08.2016 |
| 10 | Rev. Fr. M. Sebastian | 27.08.2016 |
| 11 | Rev. Fr. Jegaraj SDB | 29.08.1988 |
| 12 | Most Rev. Hubert D Rosario SDB | 30.08.1994 |

## HOLY FATHER'S INTENTION : For Political Leaders

We pray that political leaders be at the service of their own people, working for integral human development and for the common good, especially caring for the poor and those who have lost their jobs.

## CALENDER

| | | |
|---|---|---|
| 01 | Thu | St. Alphonseus Liguori Bp., Dr., Mem. |
| 04 | Sun | 18 th Ordinary Sunday |
| 06 | Tue | The Transfiguration of the Lord, Feast |
| 08 | Thu | St. Dominic Pr., Rf., Mem |
| 10 | Sat | St. Lawrence, Dn, Mr, Feast |
| 11 | Sun | 19 th Ordinary Sunday |
| 14 | Wed | St. Maximillian Mary Kolbe, Pt., M., Mem. |
| 15 | Thu | The Assumption of B.V.M. Princ. Patroness of India, Sol. |
| 18 | Sun | 20 th Ordinary Sunday |
| 20 | Tue | St. Bernard Abb., Dr., Mem. |
| 21 | Wed | St. Pius X, PP., Mem. |

| | | |
|---|---|---|
| 22 | Thu | Queenship of the B.V.M., Mem. |
| 24 | Sat | St. Bartholomew Ap., Feast |
| 25 | Sun | 21 st Ordinary Sunday |
| 27 | Tue | St. Monica, Mem. |
| 28 | Wed | St. Agustine, Bp., Dr, Mem. |
| 29 | Thu | The Martyrdom of St. John the Baptist, Mem |

**RIP**

In your Charity kindly pray for Mrs. Marikriuthal (77) beloved Mather of Rev. Fr. L. Joseph (Parish Priest of Kasthambadi) from (Sagayanagar - Substation) Anthoniyar Nagar Parish passed away on 14.07.2024. May her soul rest in peace.



வாழ்த்தி வரவேற்கிறோம்!
தஞ்சாவூர் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக பொறுப்பேற்கும்
மேதகு. முனைவர். சகாயராஜ் தம்பிதுரை
அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்...
எல்லோருடைய வாழ்க்கையும்
வரலாறு ஆவதில்லை.
வரலாறாய் ஆனவர்கள்
தனக்காக வாழ்ந்ததில்லை!
புதிய ஆயனாய் வரலாறு
படைக்கும் புனிதனே!
நல்லாயனாம் இயேசுவின்
மனநிலையே உம்
பணிவாழ்வின் நிறைவாகுமே!
பேரருட்திரு. முனைவர்.
I.ஜான் ராபர்ட்
வேலூர் மறைமாவட்ட பரிபாலகர்
அருட்பணியாளர்கள், இருபால் துறவியர்கள் மற்றும் இறைமக்கள், வேலூர் மறைமாவட்டம்